8. *தண்டாயுதம், இரா (1985), சைவ சித்தாந்தத்தில் உயிர், கோலாலம்பூர்: மலாயா அருள்நெறித் திருக்கூட்டம்.*

# ***உய்யச் சிந்தனையை வெளிப்படுத்தும் நாலடியார்***

***மு.சங்கர்***
PhD Student, Department of Indian Studies, UM
m_sangar@hotmail.com

**Abstract:** Critical Thinking is an important part of Higher Order Thinking Skills (HOTS) which is widely implemented almost in all fields. As most of us know, this field of Critical Thinking is introduced to us by Western philosophers and educationists. The Eastern thinkers, especially, the Tamil philosophers have applied these Critical Thinking skills long ago. The ancient Tamil culture is enriched with many ideas and innovations; almost all the fields of knowledge and wisdom have been touched. This paper offers evidence for the claim that Critical Thinking has been part in the Tamil culture since 2000 years, as seen in *Naladiyar*.

*Key words: Naladiyar, Critical Thinking, FRISCO Approach, Higher Order Thinking Skills (HOTS).*

**சுருக்கம்**

*இன்று, நவீனத் தொழில்நுட்பம் உச்சத்தில் இருக்கும் 'விரல்நுனி' உலகில், உயர் நிலைச் சிந்தனைத் திறன், HOTS (Higher Order Thinking Skills) எல்லாத் துறைகளிலும் மிகப் பரவலாகப் பேசப்படுகிறது; பயன்படுத்தப்படுகிறது. இந்த உயர்நிலைச் சிந்தனைத்திறன், உய்யச் சிந்தனை (Critical Thinking), ஆக்கச் சிந்தனை (Creative Thinking), ஏரணச் சிந்தனை (Logical Thinking) எனப் பல்வகைப் பெயர்களில், பல்வகைக் கோணங்களில் வளர்ச்சி பெற்று, இன்றைய உலகை ஆண்டு வருகிறது. இவை மேற்கு நாகரீகத்தால் நமக்கு அறிமுகப்படுத்தப்பட்டது என்று நாம் மேலோட்டமாக ஏற்றுக்கொண்டு பயன்படுத்தினாலும், குறிப்பிட்ட இந்தப் பெயர்களில் அறிவியல் பூர்வமாக இவை நமக்கு மேற்குலகால் அறிமுகப்படுத்தப்பட்டது என நாம் ஏற்றுக்கொள்ளும் வேளையில்; இவற்றைப் பண்டைத் தமிழர்கள் மிகச் சீரிய வகையில் கையாண்டுள்ளனர் என்பதை நற்றமிழ் இலக்கியங்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துணர்த்துகின்றன. நாலடியார் எனும் பதினெண் கீழ்க்கணக்கு நூல் இந்த உயர்நிலைச் சிந்தனை ஆற்றலை வெளிப்படுத்தும் மிகச் சிறந்த நூல்களுள் ஒன்றாகும்.*

**ஆய்வு நோக்கம்**

*தமிழ் மொழியில் சிந்தனை மூலங்கள் (அல்லது சிந்தனை வடிவங்கள்) மிகக் குறைவாகவே உள்ளன என்றும் ஆங்கிலத்தைப் போல, இம்மொழியில் சிந்தனை வளம், சிந்திக்கத் தூண்டக் கூடிய கருவிகள் இல்லை அல்லது மிகக் குறைவு எனவும் பலர் கருதியும் பேசியும் வருகின்றனர். அதுவும் கற்றவர் மத்தியில் இதுபோன்ற எண்ணங்கள் தலைதூக்கியுள்ளது மிகவும்வருத்தக்குரியது. இந்த எண்ணத்தை தகர்த்தெறியும் குறிக்கோளுடன், தமிழ்மொழி*

*சிந்தனையின் பிறப்பிடமாகத் திகழ்கிறது; சிந்தனையின் மூலமாக உள்ளது என்பதை தற்போதைய நவீனச் சிந்தனைக் கருவிகளைப் பயன்படுத்தி அறிவியல் சான்றுகளுடன் மெய்ப்பிப்பதே இந்த ஆய்வின் நோக்கம்.*

***நாலடியார்***

*பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று நாலடியார். திருக்குறளுக்கு அடுத்த நிலையில் சிறப்பாகக் கருதப்படும் நூல் இதுவே (குருசாமி, 2002). வாழ்க்கை நெறிகளை வையத்துக்கு உரைக்க வந்த நாலடியார், நான்கடி வெண்பாக்களால் வடிக்கப்பட்டு நாலடியார் எனப் பெயர் பெற்றது. நூலாசிரியர் பலர். மதுரையை ஆண்ட உக்கிரப் பெருவழுதி எனும் அரசனால் ஆதரிக்கப்பட்ட சமண முனிவர்கள் பாடிய பாடல் தொகுப்பே நாலடியார். பதுமனார் என்பவரால் தொகுக்கப்பெற்று 'நாலடி' எனப் பெயர் சூட்டப்பட்டது. இது கடைச்சங்க கால நூல். கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டு வரை எழுதப்பட்ட பாடல்கள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன (பழனிவேல் பிள்ளை, 1947). இதில் கூறப்படுகின்ற நீதிக்கருத்துகள் எல்லாக் காலத்துக்கும் ஏற்புடையனவாய் இருப்பதே இதன் நிகரற்றச் சிறப்பு.*

***உயர்நிலைச் சிந்தனைத் திறன்***

*சிந்தனைத் திறன் என்பது, மனிதனின் தகவல் பறிமாற்றத்துக்கு மிக முக்கிய ஊடகமாகத் திகழ்கிறது. இதன் வழி ஓர் ஏடல், சரியானதா என்ற முடிவுக்கு நாம் வர இயலும்* (Rajendran, 2010). *ஆய்வு, வளர்ச்சி, புத்தாக்கம் ஆகிய திறன்களுடன் கூடிய சிந்தனை ஆற்றல், உயர்நிலை சிந்தனை எனக் குறிப்பிடப்படுகிறது. சிக்கலுக்குத் தக்க வழியில் தீர்வு காணல், உய்யச் சிந்தனைப் பயன்பாடு, ஆக்ககரச் சிந்தனை மேம்பாடு ஆகியவற்றை உட்படுத்தியதே உயர்நிலைச் சிந்தனைத் திறன் என வழங்கப்படுகிறது.*

***உய்யச் சிந்தனை (Critical Thinking)***

*உய்யச் சிந்தனை என்பது இடது மூளையைப் பயன்படுத்தத் தூண்டக்கூடிய சிந்தனைக் களமாகும். புரிதல், தெளிவு, ஒரு செய்தியைத் தக்க முறையில் பயன்படுத்தும் ஆற்றல் ஆகியவற்றை மேம்படுத்தும் வல்லமை உய்யச் சிந்தனைக்கு உள்ளது. ஒன்றைப் பகுத்து அறியகூடிய திறனை இது மேம்படுத்துகிறது. ஒருவரின் சிந்தனையை முறைப்படுத்தி அதற்கு சரியான வடிவம் கொடுப்பது உய்யச் சிந்தனை (Richard Paul, 1993). இந்தச் சிந்தனை முறை மிகத் துல்லியமானதும் குறிப்பிட்ட நோக்கத்தை நிறைவேற்றக்கூடியதுமாகும் என்கிறார் ரிச்சர்ட்.*

*ஒரு பொருள் அல்லது செயல் குறித்து, பல்வேறு கோணங்களில் சிந்தித்து; பிறகு அதன் நம்பகத்தன்மையை ஆராய்ந்து; அதற்குப் பின்னர்த் தொடர் நடவடிக்கையில் இறங்குவது உய்யச் சிந்தனையின் வடிவம் எனப்படுகிறது. காரணங்களைக் கொண்டு சிந்தனை செய்து முடிவெடுத்தல் என இதனைக் கூறுகிறார் வின்செண்ட்.* Critical Thinking is using reason to make up your mind. (Vincent, 2008)

***உய்யச் சிந்தனை அணுகுமுறை: FRISCO அணுகுமுறை***

Robert H. Ennis *என்பவரால் இந்த அணுகுமுறை தோற்றுவிக்கப்பட்டது. பல்வேறு துறைகளில் இந்த அணுகுமுறை வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இது ஆறு படிநிலைகளைக் கொண்டது:*

1. Focus – *குவியம்*

*முக்கிய கேள்வி, விவரம், புள்ளி அல்லது எதற்காக ஒன்று செய்யப்படுகிறது என்ற நோக்கு*

2. Reasons – *காரணம்*
   *ஒரு முடிவைக் காண்பதற்கு முன்னதாக அல்லது முடிவெடுப்பதற்கான காரணங்கள்*
3. Inference – *அனுமானம்*
   *நாம் கண்டறியும் காரணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டால், நம் முடிவுக்கு அவை துணைபுரியுமா?*
4. Situation – *சூழல்*
   *எத்தகைய நிலை, யார் ஈடுபட்டுள்ளனர், வரலாறு?*
5. Clarity – *தெளிவு*
   *சொல்வதைத் தெளிவாக; அடுத்தவருக்கு புரியும்படிச் சொல்லுதல்*
6. Overview – *பார்வை*
   *மீள்பார்வை – கண்ணோட்டமிடுதல், முடிவு, அனுமானம், ஏற்றுக்கொண்டவற்றை மீண்டும் சரிபார்த்தல்.*

***உய்யச் சிந்தனை அணுகுமுறையில் நாலடியார் பாக்கள்***

*நாலடியார் பாடல்களை இந்த உய்யச் சிந்தனை அணுகுமுறையின் வழியாக ஆய்வு செய்யும் வேளையில், இப்பாக்களிலுள்ள உய்யச் சிந்தனை தெள்ளத் தெளிவாகப் புரியும். அதேவேளையில் அவற்றை அறிவியல் நோக்கத்துடனும் தக்க சான்றுகளுடனும் தெள்ளத் தெளிவாக விளக்க இயல்கிறது.*

*பாடல் 1 : நட்டார்க்கும் நள்ளாதவர்க்கும்*

*பயங்கரவாத அச்சுறுத்தலாலும் பிரிவினைவாதத்தாலும் உலகம் இன்று மிக அல்லலுற்று வருகிறது. இதனைத் தவிர்க்கவேண்டியதன் அவசியத்தை உலக நாடுகள் நன்குணர்ந்து அதற்கான தீவிர நடைமுறையிலும் இறங்கியுள்ளன. இதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கனியன் பூங்குன்றனாரின் தெளிவைப் பெறவேண்டும். பின்வரும் நாலடியார், 'எல்லா உயிர்களும் நம் உறவே' 'எல்லாரும் உணவைப் பகிர்ந்துண்டு வாழ்வோம்', எனும் கருத்தை முன்வைக்கிறது. இன்று ஐ.நா. செய்கின்ற பணியை அன்றே நாலடியார் எடுத்துரைத்துள்ளது பெருமைக்குரியது. துணிவான ஏடலை, மிக ஆக்ககரமான மூறையில் எடுத்துவைத்துள்ளது நாலடியார்.*

> *நட்டார்க்கும் நள்ளா தவர்க்கும் உளவரையால்*
> *அட்டது பாத்துண்டல் அட்டுண்டல் அட்டது*
> *அடைந்திருந்து உண்டொழுகும் ஆவதில் மாக்கட்கு*
> *அடைக்குமாம் ஆண்டைக் கதவு (271)*

FRISCO *அணுகுமுறை:*

1. Focus – *குவியம்*
   *இதற்கான குவியம் – பகிர்ந்துண்டுவாழல்*
2. Reasons – *காரணம்*
   *பகிர்ந்துண்டு வாழாததால் உலகம் அடையும் துன்பம்*
3. Inference – *அனுமானம்*
   *உலகில் அனைவரும் பகிர்ந்துண்டு வாழ்வதால் பசிப்பிணி தீரும் என்ற அனுமானம்; இதனால் உலக வளப்பம்*
4. Situation – *சூழல்*
   *உலகில் பசிப்பிணியால் ஏற்படும் கொடுமை*

5. Clarity – *தெளிவு*
*அடுத்தவர்க்கு உணவளிக்காதவர்க்கு மேலுலகக் கதவும் மூடப்படும் எனும் தெளிவை ஏற்படுத்துதல்*
6. Overview – *பார்வை*
*பொதுமை அடிப்படையில், உலக நன்மைக்காக அனைவரும் பகிர்ந்துண்டு வாழல்*

*பாடல் 2:*

*இன்பத் துன்பத்தை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை உணர்த்துகிறது 119-ஆம் பாடல்.*

*யா அர் உலகத்தோர் சொல்லில்லார்? தேருங்கால்*
*யா அர் உபாயத்தின் வாழாதார்? – யா அர்*
*இடையாக இன்னாத தெய்தாதார் ? யா அர்*
*கடைபோகச் செல்வம்உய்த் தார்? (119)*

*ஆராயுமிடத்து, இவ்வுலகில் பழிசொல் இல்லாதவர் யாருமிலர். எல்லாரும் பழிசொல்லுக்கு ஆளாகியுள்ளவர்களாகவே இருக்கின்றனர். இருப்பினும், ஒருவழியைக் கடைப்பிடித்து வாழாதவர் யாருள்ளனர்? ஏதாவது ஒரு முறையை அல்லது உத்தியைக் கடைப்பிடித்து அவர்கள் வாழ்கின்றனர். இடையே துன்பமடையாதவர் யாராவது உள்ளனரா? தம் வாழ்நாளில் முடிவு வரையும் இடைவிடாது செல்வத்தை அனுபவித்தவர் யார்? எவருமே இல்லை எனும் இப்பாடல் வினாக்களினாலேயே அமைந்துள்ளது. வாழ்வில் இன்பமும் துன்பமும் கலந்து வருவதே இயல்பு எனுக் கருவை நமக்குத் தருகிறது இப்பாடல். அதுவே பாடலின் குவியமாக, மையக் கருத்தாக எடுத்தாளப்பட்டுள்ளது.*

*உலகில் நல்லவர் பலரும் வல்லவர் பலரும் பழிசொல்லுக்கு ஆளாகிப் பின்னர்த் தங்கள் உண்மை நிலையை மெய்ப்பித்த வாழ்வியல் சூழல் பலவற்றைக் கண்ணுற்றிருக்கிறோம். ஆக, உலகச் சூழல், நாம் பழகும் மக்கள், நம் நிலைமை ஆகியவை இதற்குக் காரணங்களாக அமைகின்றன.*

*இப்படியாக, எல்லாருக்கும் ஏற்படும் பழிச்சொல் நமக்கும் வர வாய்ப்புண்டு என்பதை நாம் அனுமானிக்கலாம். துன்பம் எப்போதும் தொடரும் என்பதையும் அனுமானித்து அதனை எதிர்கொள்வதற்கான வழிகளையும் ஆராய வேண்டியுள்ளது. எப்படிப்பட்ட சூழலையும் எதிர்கொண்டுதான் நாம் வாழ்க்கையைத் தொடர வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்பதை இப்பாடல் நன்குணர்த்துகிறது. எப்படிப்பட்ட பழி ஏற்பட்டாலும் அதனைக் கடந்து வருவதற்கான சூழலை உருவாக்கிக்கொள்ளும் முயற்சியை நாம் கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டும் என்ற இயல்பான தன்முனைப்பையும் இந்தப் பாடல் நமக்களிக்கிறது.*

*ஆக, இன்பத் துன்பம் வாழ்க்கையில் எல்லாருக்குமுண்டு என்பதைத் தெள்ளத் தெளிவாக எடுத்துணர்த்தும் இந்த நாலடியார், முழுமையாக ஒரு வாழ்க்கைத் தத்துவத்தை நமக்கு மிக எளிய முறையில் கூறுகிறது. நாலடியார் 119-ஆவது பாடலில்,* FRISCO *அணுகுமுறை மிகப் பொருத்தமாக அமைந்திருப்பதுடன், நீதி இலக்கியம் என்ற வகையில் அது நமக்கு ஆலோசனை அல்லது அறிவுரையையும் வழங்குகிறது.*

*பாடல் 3 :*

*ஒப்பு நோக்கி சீர்தூக்கிப் பார்த்தல், உய்யச் சிந்தனை எனப் போற்றப்படுகிறது. இதற்குப் மிகப் பல எடுத்துக்காட்டுகள் நாலடியாரில் உள்ளன. பாடல் 151-இல் இது குறிப்பிடப்பட்டுள்ளது.*

*அங்கண் விசும்பின் அகல்நிலாப் பாரிக்கும்*
*திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் திங்கள்*
*மறுவாற்றும் சான்றோர் அஃதாற்றார் தெருமருந்து*
*தேய்வர் ஒருமாக உறின் (151)*

FRISCO அணுகுமுறை:

1. Focus – குவியம்
   தம் குற்றம் கண்டு வருந்துதல்
2. Reasons – காரணம்
   களங்கம் மேன்மக்கள் வாழ்க்கையில் கலக்கத்தை ஏற்படுத்தும்
3. Inference – அனுமானம்
   களங்கத்தை களைவோர் மேன்மக்கள்
4. Situation – சூழல்
   தன்னிடமுள்ள குற்றத்தை நோக்குதல்
5. Clarity – தெளிவு
   குற்றம் செய்தால் அதனால் ஏற்படும் விளைவு
6. Overview – பார்வை
   குற்றம் செய்யாதிருங்கள் – குற்றம் செய்தால் நமக்கு அழிவு

இப்பாடல், நிலவையும் மேன்மக்களையும் ஒப்பு நோக்கியுள்ளது. ஒழுக்கத்தில் தவறு நேர்ந்தால் மேன்மக்கள் வருந்தி மெலிவர் என மிக அழகாகக் கூறுகிறது இப்பாடல். இப்படியாக, நாலடியாரில் உய்யச் சிந்தனைத் திறன் விரவிக்கிடக்கிறது. எல்லாப் பாடல்களையும் நாம் தற்போதைய உய்யச் சிந்தனை அணுகுமுறை, FRISCO மூலம் தெளிவுபடுத்த இயலும்.

**ஆய்வு முடிவு**

உயர்நிலைச் சிந்தனைத் திறன் HOTS (Higher Order Thinking Skills), குறிப்பாக உய்யச் சிந்தனை (Critical Thinking), முதலில் உலகின் மூத்த மொழியான தமிழ்மொழியில்தான் தோன்றியிருக்கிறது. ஜி.யு.போப் (போப்பையர்) எழுதிய முன்னுரையில் இது குறிப்பிடப்பட்டுள்ளது. ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட இலக்கியங்களில், குறிப்பாக இந்த ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நாலடியார் மூலமும் இது நமக்குத் தெளிவாகிறது. FRISCO அணுகுமுறை பரவலாக நாலடியாரில் உள்ளதை நாம் காண முடிகிறது. ஆனால், இவற்றை இன்று வரையறுத்திருப்பதைப்போல, ஓர் அறிவியல் அணுகுமுறையில் (scientific method or approach) பண்டைத் தமிழர்கள் குறிப்பிடவில்லை. அதாவது, Critical Thinking என்ற பெயரில் குறிப்பிடாமல் நீதி பகரும் வாழ்க்கை வளப்பத்துக்கான இலக்கியமாகவே அதனை அவர்கள் பொதுவாகக் குறிப்பிட்டுள்ளனர். எனவே, தமிழில் சிந்தனை வளமும் மூலமும் இல்லை எனும் கருத்து, தகர்த்தெறியப்பட்டுள்ள அதேவேளை, உயர் சிந்தனையின் மூலமாக தமிழ் இருந்திருக்கிறது என்பதை நாம் நிறுவ முடிகிறது.

**மேற்கோள்கள்**


குருசாமி அ.சா., (2002). *நாலடியார் மூலமும் எளிய உரையும்,* சென்னை, இந்தியா: சுரா புக்ஸ்.

கந்தசாமி பிள்ளை M.R., & முத்துரத்ன முதலியார் S. (1990). *நாலடியார் உரைவளம்.* இந்தியா: சரஸ்வதி மகால் நூலகம்.

சீனிவாசன், ரா. (2000). *நாலடியார் செய்யுளும் செய்திகளும்.* சென்னை, இந்தியா: அணியகம்.

தேவ்நாத் சி. எஸ்,. (1997). *மகிழ்வோடு வாழ நாலடியார் காட்டும் வழிகள்,* சென்னை, இந்தியா : நர்மதா பதிப்பகம்.

பழனிவேல் பிள்ளை பெ., (1947). *நாலடி இன்பம்.* சென்னை, இந்தியா: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

ஸ்ரீ சந்திரன். (1999). *நாலடியார் மூலமும் தெளிவுரையும்.* சென்னை, இந்தியா: வர்த்தமானன் பதிப்பகம்.

Joel Rudinow, & Vincent E. Barey., (2008). *Invitation to Critical Thinking.* Belmont, USA: Thomson Wadsworth.

Pope G.U., (1958). *Naladiyar*. Chennai, India: The South India Saiva Siddhanta Works

Publishing Society Tinnevelly Limited.
Rajendran, N. S., (2010). *Teaching & acquiring higher-order thinking skils: Theory & Practice.* Tanjung Malim: Universiti Pendidikan Sultan Idris.
Robert H. Ennis, (1995). *Crirtical Thinking*. New Jersey: Prentice Hall.
Robert L. Shurter, & John R. Pierce. (1966). *Critical Thinking its Expression in Argument*. New York: McGraw Hill.
Richard W. Paul, (1993). *Critical Thinking (revised 3rd Edittion).* Victoria, Australia: Hawker Brownlow Education.